REGD. No. M. 6311

: PHONE 55630

தனி இதழ்
ஒரு அணு
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 311

நம் நாடு

தி.மு.க.தினஇதழ் ஆசிரியர்..அண்ணுதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

சென்னை: வைகாசி 30உ சனி (12—6—54) ★ ★ ★ வெளியூர்: வைகாசி 31உ ஞாயிறு (13—6—54)

வகுப்பு நீதியை ஒழித்த வஞ்சகர்கள்

வரிந்து கட்டி வம்புக்கு வருகின்றனர்

'இந்து'—'மித்திரன்' போர்க்கோலம்!

இளித்தவாயரை ஏய்க்கும் வாதங்கள்

நாடு சீறும்---பகை மூளும்!

★

(நமது அரசியல் நிருபர்)

வகுப்பு நீதியை ஒழித்த வஞ்சகர்கள் இப்போது வரிந்து கட்டிக் கொண்டு வம்புக்கு வருகிறார்கள்.

தொழில் கல்லூரிகளில் (வைத்திய, எஞ்ஜினியரிங்) மாணவர்களைச் சேர்க்கும் முறையில், காமராசர் மந்திரி சபை, ஒரு மாறுதலைச் செய்திருப்பதைச் சாக்காகக் கொண்டு, ஏகபோகமிராசு பாத்தியதைக் கொண்டாடும் எத்தர்கள், தங்கள் வயிற்றெறிச்சலைக் காட்டிக் கொள்கிறார்கள்.

பல வகுப்பினர் சமூக நிலையிலும், அரசியல், பொருளாதார, கல்வி நிலையிலும், சமத்துவமின்றி, நிரம்ப ஏற்றத் தாழ்வுகளுடன் தென்னாட்டில்—திராவிடத்தில் உள்ளனர் என்பது எவரும் அறிந்த உண்மையாகும்.

இதன் விளைவாக, உத்தியோக மண்டலம் முழுவதும் பார்ப்பனமயமாகி, பார்ப்பனரல்லாத மக்கள் கீழான—கேவலமான நிலைக்குத்தள்ளப்பட்டனர்.

'சர்வம் பார்ப்பன மயம் ஜெகத்!'—என்ற பேச்சு எங்கும் பரவிற்று.

வகுப்பு நீதி ஏற்படாவிட்டால் ஒழிய சமூகத்திலே அமைதி இருக்காது என்ற அளவுக்குக் கிளர்ச்சி வளரவே, ஜஸ்டிஸ் கட்சி வகுப்பு நீதியைப் புகுத்த, வகுப்பு வாரி பிரதிநிதித்வம் கொண்டு வந்தனர். ஓரளவுக்கு அநீதியும் அக்கிரமும் குறையலாயிற்று.

இந்த ஒரு காரணத்துக்காகவே, ஊர் திரட்டிக்கொண்டு விவரமும் விளக்கமும் பெறாத பார்ப்பனரல்லாதாரையும் துணைக்கு அழைத்துக் கொண்டு, வகுப்பு வெறியர்கள் போரிட்டு, ஜஸ்டிஸ் கட்சியை ஒழித்தனர்.

வகுப்பு நீதியை எளிதில் ஒழிக்க முடியாதிருந்தது,

ஒரு பார்ப்பனப் பெண்ணுக்கு, வைத்தியக் கல்லூரியில் இடம் கிடைக்காததைக் காரணமாகக்காட்டி, வழக்குத் தொடுத்து, சுப்ரீம் கோர்ட் வரையில் சென்று, 'வகுப்பு வாரி பிரதிநிதித்துவம், இந்திய அரசியல் சட்டப்படி செல்லாது; என்று தீர்ப்புப் பெற்று, வகுப்பு நீதியைக் குழி தோண்டிப் புதைத்தனர்.

இந்தக் கைங்கரியத்தைத் திறம்படச் செய்தவர், காலஞ்சென்ற அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர்.

இதன் விளைவாக, கல்லூரிகளிலும், உத்தியோக மண்டலங்களிலும், பார்ப்பனர் ஏகபோக மிராசு பாத்தியதை பெற்றனர்.

மாணவர் உலகம், பலத்த கிளர்ச்சி செய்தது; பொது மக்களும் கண்டித்தனர்; ஆனால் 'இந்து' 'மித்திரன்' போன்ற ஏடுகளின் துணை கொண்டு, வகுப்பு வெறியர்கள் வெற்றி பெற்றனர்.

தொழில் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்ப்பதில், அன்றிருந்த முதலமைச்சர் குமாரசாமி ராஜா, ஒரு திட்டம் புகுத்தினார்—இதன்படி, மாணவர்களை வகுப்பு வாரியாகக் கவனித்துச் சேர்ப்பதற்கும் பதில், பரீட்சை மார்க்குகளுடன், மாணவர்களின் தேக திடம், உள்ளப்பாங்கு, பொது நலத் தொண்டு போன்றவைகளும் கவனிக்கப்பட வேண்டும் என்று ஏற்பாடு ஆயிற்று.

இந்த பாடபுத்தகமல்லாத விஷய ஞானத்துக்கு, 150 மார்க்குகள் தரப்பட்டன.

வகுப்பு நீதி முறை ஒழிக்கப் பட்டு, கண்துடைப்புக்காக ஒரு திட்டம் புகுத்தப்பட்டது—இதனால், மீண்டும் பார்ப்பனரே ஆதிக்கம் பெறுவதற்கு வழி கிடைத்தது! 'இருந்தாலும் பரவாயில்லை' என்ற ஆறுதல் இருந்தது!

இந்த அரைகுறை ஏற்பாடு, நடைமுறையில் இருப்பதும், சனாதனச் செம்மல் ஆச்சாரியாருக்குப் பிடிக்கவில்லை. எனவே, 150 மார்க்குகள் என இருந்ததை, 50 ஆகக் குறைத்தார்!

வகுப்பு நீதி மீண்டும் கிடைத்தாக வேண்டும் என்று மாணவர்கள், தமிழகமெங்கும் நடத்திய கிளர்ச்சி சிறப்புடையதாக இருந்தது; எனினும், அநீதியைத் துடைத்திட அரசாங்கம் முன்வரவில்லை.

'அரசியல் சட்டப்படி, வகுப்புவாரி பிரதிநிதித்துவம் கூடாது,' என்று ஒரே பேச்சும் பேசி, நீதியின் வாயிலை அடைத்து விட்டார்கள். பார்ப்பனரல்லாதார், மனம் குமுறினர்!

இப்போது, காமராசர் மந்திரிசபை, இந்த முறையிலே ஓரளவு மாறுதலைச் செய்திருக்கிறது.

பார்ப்பனர்களே, தொழில் கல்லூரிகளில் பெருகும் முறை அக்கிரமம் என்று கண்டித்துவிட்டு, பார்ப்பனரல்லாதாருக்கு அவர்களின் எண்ணிக்கைக்குத் தக்க அளவு இடம் தருவதுதான் வகுப்பு நீதியாகும் என்று கூறிவிட்டு, காமராஜர் இந்த மாறுதலைச் செய்யவில்லை.

சர்க்கார் அறிக்கையின்படி காட்டப்படும் காரணம், வகுப்பு நீதியல்ல.

"வெறும் புத்தகப் பூச்சிகளை மட்டும் வைத்திய, என்ஜினியரிங் கல்லூரிகளில் சேர்ப்பது அந்தத் தொழில்களின் தரத்தை வளமுள்ளதாக்காது; எனவே, புத்தகப் படிப்புக்கான பரீட்சை மார்க்குகளுடன், உடல் உளம், உள்ளப்பாங்கு விளையாட்டுக் கூடத்தில் பெறும் ஆற்றல், பொதுநலப் பணியில் காட்டும் ஆர்வம் ஆகியவற்றுக்காக 150 மார்க்குகள் சேர்த்து மாணவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும்"

என்று சென்னை சர்க்கார் கூறுகிறது.

இந்த முறை ஏற்கனவே இருந்ததுதான்—ஆச்சாரியாரால் அமுலாக்கப்பட்டதுதான்! அதற்கும் காமராஜர் திட்டத்துக்கும் உள்ள மாறுதல், மார்க் எண்ணிக்கையிலேதான் இருக்கிறது. முன்பு 50 இருந்தது—இப்போது 150 மார்க்குகள்—இவ்வளவுதான் மாறுதல்; இதற்கு, 'இந்து'வும், 'மித்திரனு'ம் வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு, போர்க் கோலம் போட்டுக்கொண்டு கிளம்பி விட்டன.

50 மார்க்கை 150 ஆக உயர்த்திவிடுவது, எந்த அநீதியை உண்டாக்கும்? இந்த மாறுதலைக் கண்டு ஏன் இந்த ஏடுகள் இவ்வளவு அச்சப்பட வேண்டும்—அலறித் துடிக்க வேண்டும்?

காமராஜரின் திட்டம், பார்ப்பனருக்கு இப்போது கிடைத்துவரும் அளவுக்கு மீறிய சலுகைக்குக் குழி தோண்டும் என்ற பீதியா? ஏன் பதைக்க வேண்டும்?

'இந்து'வும், 'மித்திரனு'ம்—பரீட்சை மார்க்குகளைப் பார்ப்

(4-ம் பக்கம் பார்க்க)

தி. மு. க. மாநாடுகள்

சர்க்கார் இடங்கள் தர மறுப்பு

மதுரை, வேலூர் மாநாடுகள் ஒத்திவைப்பு

திராவிட முன்னேற்றக் கழக மாவட்ட மாநாடுகள் குறிப்பிட்ட திட்டத்தின்படி நடைபெற முடியாதபடி குந்தகம் ஏற்பட்டு வருகிறது.

மாநாடுகள் நடைபெற வேண்டிய மாவட்டங்களில், நமது தோழர்களால் பொதுமக்களிடம் போதாதவு திரட்ட முடிகிறது; என்றாலும், ஆங்காங்கு அதிகாரிகள் மூலம் பெற வேண்டிய அனுமதிகள் கிடைப்பதில் பெருத்த தொல்லைகள் ஏற்படுகின்றன; இதனால், மாநாடுகள் குறிப்பிட்ட தேதிகளில் நடைபெற முடிவதில்லை

சென்ற திங்களே மதுரை மாவட்ட மாநாடு நடந்திருக்க வேண்டும்; அதற்கான ஏற்பாடுகளைத் தோழர்கள் ஆர்வத்துடன் கவனித்து வந்தனர்; வரவேற்புக் குழு அமைக்கப்பட்டு, மாநாட்டுக்குத் தலைவர், திறப்பாளர் அழைக்கப்பட்டு, நாடக ஏற்பாடுகள் முடிக்கப்பட்டுவிட்டன; கடைசி நேரத்தில், மாநாடு நடத்துவதற்காக இடம் கிடைக்கவில்லை; காரணம், இடம் சர்க்காருடையது! அந்தத் திடலில் மாநாடு, நாடகம் நடத்த அதிகாரிகள் அனுமதி அளிக்கவில்லை!

இதுவரை நடைபெற்ற எந்த தி. மு. கழக மாநாடும், பொதுமக்களுக்கு எவ்விதமான வசதிக் குறைவைத் தந்ததாகவோ, ஒரு துளி கலவரத்துக்கு இடமளித்ததாகவோ மாற்றாரும் கூற முடியாது. பல்லாயிரக்கணக்கான மக்கள் ஆர்வத்துடன் கூடினர். அமைதி நிலவிற்று. திராவிட முன்னேற்றக் கழகத்தார் மட்டுமல்ல—கட்சிகளில ஈடுபாடு இல்லாத மக்களேகூட, 'தி. மு. கழக மாநாடு, அறிவுக்கு விருந்தளிக்கிறது; பல பிரச்சினைகளை அம்மாநாடுகளிலே விளக்குகிறார்கள்; புத்தறிவு தரும் அரிய நாடகங்கள் நடத்திக் காட்டுகிறார்கள்"—என்று கூறி மகிழ்கின்றனர்; ஆனால். ஒரு காரணமும் இன்றி, மாநாடு நடத்துவதற்கு, சர்க்காருக்குச் சொந்தமான இடங்களைத் தர அதிகாரிகள் மறுத்துவிடுகிறார்கள்.

தி. மு. கழகம், கொட்டகைகளிலோ, முச்சந்திகளிலோ மாநாடுகளை நடத்தக்கூடிய வகையிலே இருப்பதல்ல—வளர்ந்து வரும் இயக்கம்—நாற்பதாயிரம் ஐம்பதாயிரம் மக்கள் சாதாரணமாகக் கூடுகிறார்கள்—எனவே, பெரிய திடலில் மட்டுமே மாநாடு நடத்த இயலும்.

தி. மு. கழக மாநாடுகளுக்கு, மாவட்டத்திலே உள்ள உட்புற கிராமங்களிலிருந்தெல்லாம், குடும்பம் குடும்பமாக வருவதையும், மாநாட்டுக் கொட்டகையிலேயே, குழந்தைகளுக்கும் பலப்பல தொட்டில்கள், ஏணைகள் அமைக்கப்படுவதையும் சர்க்காரும் அறிவர். இந்த அளவு வளர்ச்சி ஏற்பட்டுள்ள கழக மாநாட்டுக்கு, சர்க்கார் தமது வசம் உள்ள திடல்களைத் தர மறுப்பது, மறைமுகமாக, கழகத்தைக் கெடுக்கும் முயற்சி என்பதன்றி வேறென்ன?

எத்தகைய நிபந்தனைகள் வேண்டுமானாலும் விதிக்கலாம்—என்று நமது தோழர்கள் கூறியும் கூட, திடல் தர மறுத்துவிடுகிறார்கள்.

மதுரை மாநாடு நடைபெறுவது தாமதமானதற்குக் காரணம் இதுதான்—அதிகாரிகள் மறுத்துவிட்ட பிறகு, நமது நண்பர்

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 12—6—54 சனி

தாயகம் காண!

பற்றும் பாசமும் பாழ்பட்டு விட்டதோ!
கூடிப் பணி புரிந்த காலை மறந்தீரோ?
தோழமையை அழித்தொழிக்கத் துணிந்தீரோ!
எப்படித்தான் மறந்தீர், ஏனோ அன்பை இழந்தீர், என் அருமைத் தோழர்களே! ஏனோ இந்தக் கோபம் கொண்டீர்!

என்று கூறுகிறார்—கண்ணீரும் கம்பலையுமாகக் காட்சி தருகிறார்—சிலசமயம் கனலும் கக்குகிறார்—பலமுறை கைகளைப் பிசைந்து கொள்கிறார் பம்பாய் வட்டாரக் காங்கிரஸ் தலைவர் பட்டீல்!

பெயரளவில் காங்கிரசின், இரும்பு மனிதராம் படேலுடன் ஓரளவு ஒப்பு இருப்பதைச் சாக்காகக் கொண்டு, தோழர் பட்டீல், பம்பாய்ப் பகுதிக்கு மட்டுமல்ல—இந்தியத் துணைக் கண்டத்துக்கே, 'வழி' காட்டும் வல்லமை தமக்கிருப்பதாகக் கருதிக் கொண்டு, அடிக்கடி வாய்ப்பறை அறைந்து வருகிறார்; எனினும், இதுபோது, அவருடைய குரலில் துணிவு குறைந்து, துக்கம் அதிகரித்திருக்கிறது; காரணம், தமது குரலின் செல்வாக்கு சிதையும் என்பது மெள்ள மெள்ள, ஆனால் தெளிவாகத் தெரிகிறது.

மொழி வழி அரசுகள் அமைவதே பெரியதோர் சாபக்கேடு — அதனை அனுமதிப்பது பெரியதோர் ஆபத்தாகும்—எவரெவர் மொழி வழி அரசு கேட்கின்றனரோ, அவரெல்லாம், 'இந்தியாவின் துரோகிகள்' — அவர்களை விட்டு வைப்பது கூடாது; அழித்தொழிக்க வேண்டும்—என்று பட்டீல், படபடத்துப் பேசி வருகிறார்.

மொழிவழி அமைப்பை எதிர்க்கவே ஓர் இயக்கமும் காணத் துடிதுடித்து நிற்கிறார்.

ஆனால், காலமும், மக்கள் கருத்தும், பட்டீல்களின் பதம்பார்த்துக்கு அஞ்சிடவில்லை; நாள் தவறாமல், இந்தியத் துணைக்கண்டமெங்கும் மொழி வழி அரசுக்கான கிளர்ச்சி பூத்தவண்ணமிருக்கிறது—புள்ளி விவரங்கள் பேசியபடி உள்ளன.

இந்தப் பிரச்சினைக்காகவே அமைக்கப்பட்ட 'கமிஷன்' சென்றுமிடமெங்கும் காணும் 'வேட்கை'—எத்தகைய சமரசப் பேச்சுப் பானத்தாலும் அடக்கிவிடக் கூடியதல்ல என்பதை உணர்ந்து விட்டது.

எனினும், பட்டீல்கள் வாளாயிருக்க இயலுமா! வெடிக்கத்தானே செய்வர்! எனவே, பம்பாய் பட்டீல் 'பிற இடங்கள் எப்படியோ போகட்டும் — நமது 'பிழைப்பிடம்' வரையிலாவது காப்பாற்றிக் கொள்வோம்'—என்ற அளவுக்கு வந்து சேர்ந்திருக்கிறார் — அதிலேயும், கொதிப்பைக் குறைத்துக்கொண்டு கொஞ்சு மொழி பேசிடலாம்; பருவத்தை நெறித்திடும் போக்கும் ஜதிலாகம் புன்னகை காட்டிப் பார்க்கலாம்; 'பேயே! நாயே!' என்று ஏசுவதை நிறுத்திக் கொண்டு, 'கண்ணே! மணியே!' என்று அன்பு மொழியைக் குழைத்துப் பார்க்கலாம்; விழியை உருட்டுவதை நிறுத்திக் கொண்டு கண்ணீர் உகுத்துப் பார்க்கலாம் — என்று எண்ணி, கோலத்தைத் திருத்திக் கொண்டு நிற்கிறார்; எனவேதான், 'பற்றும் பாசமும் இழந்தீரா? பழைய தோழமையை மறந்தீரா?' என்று பேசுகிறார்.

பம்பாய் வட்டாரம் இன்று வியாபாரக் கோமான்களின் கோட்டம்! குஜராத்திகளும் மார்வாடிகளுமே பெரும்பாலும் வியாபாரிகள்! இலாப வேட்டை இவர்களிடம்! ஆனால், நாட்டுக்கு உடையவர்கள், பாடுபட்டு வளம் தருபவர்கள், நாட்டைக் காத்திடக் குருதி கொட்டுபவர்கள் மராட்டியர்! மராட்டியரோ, பெரிதும் உழவர்!!

ஒரு காலம் இருந்தது—பாதுஷாக்களை அடக்குமளவுக்கு வீரத்தை, 'மஹாராஷ்டிரம்' அளித்த காலம்! வீர சிவாஜியின் வெற்றிக் கொடி விண்முட்டப் பறந்த காலம்! மலைகளிலே கோட்டைகளையும், மக்களின் மனதிலே தியாக ஊற்றையும் ஒருசேரப் பெற்று, மராட்டிய விடுதலை வீரன் சத்ரபதி சிவாஜி, சாம்ராஜ்யம் அமைத்து வாழ்ந்த காலம்! — இன்று? — 'அந்தோ!' என்று கூறிக் கண்கசியாதார் இருக்க முடியாது! 'தராசு' தான் இன்று ஆயுதம் — கூர்வாள், காட்சிப் பொருளாக்கப் பட்டு விட்டது! எதிரியின் தலை தன் தாளின் கீழ் விழும் வரைத் தீரப் போரிட்ட மராட்டிய மக்கள், இன்று உரிமை இழந்து, அதன் பயனாக வாழ்வின் வளம் இழந்து வாடுகிறார்கள்!

இந்தியத் துணைக் கண்டமெங்கும், மலர்ந்துள்ள, மொழி வழி அரசு அமைக்கும் வேட்கை, மராட்டியத்திலே எழிலுடன் காணக் கிடக்கிறது. பல்வேறு அரசியல் கட்சியினரும் இந்தப் பிரச்னையில் ஒன்றுபட்டு நிற்கின்றனர்.

மராட்டிய மண்டலம் அமைக்கப்பட வேண்டும்—பம்பாய் நகரம், மராட்டிய மண்டலத்துக்குச் சொந்தமாக வேண்டும்—என்பது ஒருமித்த முடிவாகி விட்டது.

இதுகண்டு, பட்டீல் பதறுகிறார்—இந்த முடிவு, மராட்டிய மக்களுடைய எழுச்சியையும், உறுதியையும் எடுத்துக் காட்டுவதாக இருப்பது கண்டு, இதனை எந்நாளும் பலிக்கவொட்டோம் என்று எண்ணி, பசப்பு மொழிகள் திருக்கிறார்.

'தனி மாகாணம் ஏன் கேட்கிறீர்கள், தோழர்களே! இந்த மாகாணமே, மராட்டியருக்குத்தானே சொந்தமானது! இங்குள்ள மக்களில் நூற்றுக்கு ஐம்பது பேர் மராட்டியர்தானே! தனி மாகாணம் ஏன் கேட்கிறீர்கள்" என்கிறார் பட்டீல்.

மொழிவழி அரசுக்கு எதைக் காரணமாகக் காட்டுவரோ, அதனையே, மொழிவழி அரசு வேண்டாம் என்பதற்குக் காரணமாகக் காட்டும் சிந்தையில் இந்த விற்பன்னர் ஈடுபடுகிறார்.

"உன்னுடைய வீடுதானே இது; இதிலே நீ இருந்தால் தானே உன் வீடு என்றாகும்; அனைவரும் இருக்கட்டும்"—என்று உபதேசிக்கும், பேரறிவாளராகிறார்.

மரத்தடியில் சுருண்டு கிடக்கும் மணிவாசகச் செட்டியாருடைய தர்ம சத்திரத்தில், நாளொன்றுக்கு ஐநூறு 'வேத பிரமணருக்கு' சமாராதனையாம்!—அப்படியிருக்கிறது, பட்டீல் பேச்சு.

மராட்டியருக்குத்தான் பம்பாய் மாகாணம் சொந்தமாம்; ஆனால், அங்கு குஜராத்திகள் கொடி கட்டி ஆளுவார்கள்; மார்வாடிகள் திண்டுகளில் சாய்ந்தபடி தர்பார் நடத்துவார்கள்; மராட்டியரோ, மாடு கன்று மேய்த்துக்கொண்டும், பாதியும் பட்டினியிலிருந்து கொண்டும், 'தேசியம்' பேசித் திருப்திப்பட வேண்டுமாம்!

மராட்டிய மண்டலம் அமைப்பதிலும், அம்மண்டலத்திலே, பம்பாய் இடம் பெற்றாக வேண்டுமென்பதிலும், கம்யூனிஸ்டுகள் உட்பட சகல மராட்டியரும் ஒன்றுபட்டு உறுதியுடன் நிற்பது கண்டு பட்டீல், "கம்யூனிஸ்டுகள்கூட உங்களுக்கு நண்பர்களாகி விட்டனரா? நான் எவ்வளவு நட்புகொண்டவன்? முப்பத்தைந்து ஆண்டுகளாக நாம் ஒன்றுகக்கூடிப் பணி புரிந்தோம்; தோழமை கொண்டிருந்தோம்; அதனை மறந்தீரா, அன்பர்களே!" என்று காதல் பேசிப் பார்க்கிறார்.

முப்பத்தைந்து ஆண்டுகளாக இருந்துவந்த 'தோழமை'க்காக, மொழி வழி உரிமையை இழக்க எவரே விரும்புவர்! மேலும் இந்த 35 ஆண்டுகளாக, மொழி வழி அரசு அமைக்கப்படும் என்று பேசிப் பேசி அல்லவா, அந்தத் 'தோழமை' ஏற்படுத்தப் பட்டது! இப்போது, ஆதிக்க ஆசையினால் அல்லவா, பட்டீல் போன்றவர்கள், மொழி வழி அரசு கூடாது என்று பேசி, எதிர்ப்பு மூட்டுகின்றனர். தோழமையை வளர்க்கும் வழியா இது?

அழகான கண்கள்! செவ்வரி படர்ந்த கண்கள்! கெண்டை நிகர் விழிகள்!—என்று புகழ்வது, அந்த விழிகளைத் தோண்டி எடுக்கவா! மராட்டியரிடம் பாசம் இருப்பதாகவும், தோழமை இருப்பதாகவும் பசப்புவது, அவர்தம் பிறப்புரிமையை ஒழிக்கவா! மராட்டியர், வீர மரபினர்! வீர வரலாறு பெற்றுள்ளவர்கள்! பயமூட்டியோ பசப்பியோ, அவர்கள் கொண்டுள்ள உறுதியை ஒழித்து விட முடியாது.

பம்பாய் பிரதேச காங்கிரஸ் கமிட்டியில், 'மொழிவாரியாக பம்பாய் மாகாணத்தைப் பிரிப்பது கூடாது,' என்று தீர்மானித்துள்ளனர்,' பட்டீல் குழுவினர்; மராட்டியரை மல்லுக்கு இழுக்கின்றனர்; விளைவு விபரீதமாகத்தான் இருக்கும்!

மொழிவழி அரசு அமைவதை, தமக்கோர் தாயகம் அமைவதைக் காங்கிரஸ் எதிர்க்கிறது என்பதறிந்து, மராட்டியர் சீறி எழப் போகின்றனர்! அவர்களின் கிளர்ச்சி, டில்லிக்குப் பெரியதோர் தலைவலி ஆகப் போகிறது!

காட்டுமிராண்டிகள், சிறுபிள்ளைத்தனம், பித்தர்கள்—என்ற சொற்களை எல்லாம் ஏற்கனவே நேரு பண்டிதர் வீசி விட்டார் நம்மீது! மராட்டியர்மீது வீச, வசை மொழி அகராதியை பண்டிதர் தேடிக் கொண்டிருப்பார்.

அதேபோது, எத்தகைய கஷ்ட நஷ்டம் ஏற்படினும் 'தாயகம்' பெறுவது என்ற உறுதியுடன், மேற்கொண்டாக வேண்டிய கிளர்ச்சிப் பாதையை அமைத்துக் கொள்ளும் காரியத்திலே, மராட்டிய மக்கள் ஈடுபடத்தான் போகிறார்கள்! வெற்றி பெறத்தான் போகிறார்கள்!!

இந்தியாவிலிருந்து இறக்குமதி இல்லை

கோவா போர்க்கோலம்!

கோவா அரசு இந்தியாவிலிருந்து பொருள்கள் இறக்குமதி செய்வதைக் குறைத்துக் கொள்ளும் எனத் தெரிகிறது.

ரூ. 85-க்கு அதிகமான மதிப்புடைய பொருள் இறக்குமதிக்கு சர்க்காரின் அனுமதி தேவைப்படும் என்று அறியப்படுகிறது.

தீப்பெட்டிகள் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யக் கூடாதென்று கோவா அரசு முடிவு செய்துள்ளதாம். இது, கோவாவில் உள்ள ஒரே தீப்பெட்டித் தொழிற்சாலையில் உற்பத்தியாகும் தீப்பெட்டியை ஊக்குவிப்பதற்கென்று சொல்லப்படுகிறது.

விசாரணை செய்க!

லாகூர், ஜூன் 9—

ஆசாத் பாகிஸ்தான் கட்சியின் அமைப்புக் குழு, கிழக்கு வங்கத்தில் சமீபத்தில் நடைபெற்ற சம்பவங்களை விசாரிக்க ஒரு குழு நியமிக்க வேண்டும் என அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டுள்ளது.

உயர்நீதி மன்றம் போன்றவைகளின் உயர்தர நீதிபதிகள் கொண்ட குழு, இந்த விசாரணையை நடத்த நியமிக்கப்படலாம் எனவும், ஆசாத் பாக் கட்சிக் குழு யோசனை கூறியுள்ளது.

பண்டிதர் பரிசளித்த புலிக்குட்டி!

பண்டித நேருவால் இங்கிலாந்துக்கு பரிசாக அளிக்கப்பட்ட புலிக்குட்டி ஒன்று டெல் அவீவ் போய்ச் சேர்ந்தது.

தனிச் சட்டம்

எல். ஐ. எம், ஜி. சி. ஐ. எம். டாக்டர்களைத் தனியாகப் பதிவு செய்வதற்காக சென்னை சட்டசபையின் அடுத்த கூட்டத்தில் சட்டமொன்று இயற்றப்படும் என்று அமைச்சர் ஏ. பி. ஷெட்டி கூறினார்.

சந்தேகமில்லையே!

நாய்லாந்திலிருந்து திரும்பிய 500 தேசீயச் சீன கொரில்லாக்கள், இரங்கூனுக்கு 200 மைல் வடகிழக்கே பர்மிய எல்லையில் முகாம் போட்டிருக்க வேண்டும் என்று பர்மா சர்க்கார் அறிக்கை ஒன்று கூறுகிறது.

கொலம்பியாவில் படுகொலை

13 மாணவர் பலி

பதின்மூன்று மாணவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்! ஐந்து பேர் படுகாயமுற்றனர்!

இந்தப் படுகொலை 25 ஆண்டுகட்கு முன் ஏற்பட்ட மாணவர்—இராணுவ மோதலின் நினைவு தினம் கொண்டாடுகையில், இராணுவத்தினருடன் மாணவர்கள் மோதிக் கொண்டதால் நிகழ்ந்துள்ளதாம்.

நூற்றுக்கணக்கான மாணவர்கள், கறுப்பு உடை தரித்து கொலம்பியக் கொடியேந்தி, 'நீதி' வேண்டும் என்று முழக்கமிட்டுக்கொண்டு, தேசியக் கீதத்துடன் ஊர்வலமாக, நகரின் மத்தியப் பகுதியை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர்.

குடியரசுத் தலைவரின் அரண்மனைக்கருகே இராணுவ வீரர்கள், டாங்கிகள், ஆயுதங்களுடன்கூடிய கார்கள் இவற்றினால் தங்களுடைய வழி மறைக்கப்பட்டிருப்பதை மாணவர் கண்டனர்.

'கில்லுங்கள்' என்ற இராணுவ உத்தரவை மதியாது மீறித் தொடர்ந்து நடந்தபோது, இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனராம்.

இந்தப் படுகொலையில் முதல் பலியான மாணவரின் இறுதிச் சடங்குகளை இராணுவ மரியாதையுடன் நடத்த வேண்டுமென்றும் நகர் முழுதும் மூன்று நாள் துக்கம் அனுஷ்டிக்க வேண்டுமெனவும் குடியரசுத் தலைவர் உத்தரவிட்டுள்ளாராம்.

நேபாளத்திற்கு இந்திய விமானப் படை

டில்லியின் 'தாராளம்'

நேபாள விமானப் போக்குவரத்து அபிவிருத்தியை துரிதப்படுத்தும் திட்டம் ஒன்று இந்திய அரசாங்கத்தின் பரிசீலனையிலிருக்கிறதாம்.

இத்திட்டத்தின்படி, நேபாள அரசுக்கு நான்கு அல்லது ஐந்து விமானப் படை வரிசைகளும், தகுந்த வேண்டிய விமானப்படை வீரர்களும், நேபாளத்திற்கு, இந்திய அரசு கடனாகத் தரும்.

தொடர்பற்றிருக்கிற மாவட்ட தலைநகர்களை, விமானப் போக்குவரத்தின் மூலம் தொடர்புண்டாக்கிக் கொள்ள நேபாள அரசு விரும்புகிறது.

குடி தண்ணீர் பஞ்சம் உயிரைக் குடித்தது

பலருக்குக் காயம்

கராச்சி, ஜூன் 9—

ஒருவர் கொல்லப்பட்டார்! இருபது பேருக்கு மேல் பலத்த காயமடைந்தனர்!!

இந்தப் பரிதாபகரமான சம்பவம், தண்ணீர் பிடிப்பதற்காக தெருக் குழாயருகில், வரிசையாக நின்று கொண்டிருந்த ஆண், பெண், குழந்தைகள் இவர்களிடையே, வரிசை குலைந்ததினால் ஏற்பட்ட குழப்பத்தினால் நிகழ்ந்துள்ளது.

மக்களின் எண்ணிக்கைப் பெருக்கமே, போதுமான தண்ணீர் கராச்சி நகரில் கிடைக்காததற்குக் காரணம் எனச் சொல்லப்படுகிறது.

பத்திரிகை கமிஷன் அறிக்கை தயார்

இந்திய சர்க்காரால் நியமிக்கப்பட்ட பத்திரிகை கமிஷன் தன் அறிக்கையைத் தயார் செய்து விட்டதாக அக்கமிஷன் உறுப்பினர் சி. பி. இராமசாமி கூறினார். அறிக்கையில் உறுப்பினர்கள் ஜூன் 14-ல் பம்பாயில் கையெழுத்திடுவார்கள் என்று தெரிகிறது.

அபாயகரமான நிலையில் அமெரிக்கா இருக்கிறதாம்!

பொதுவுடைமையர் வளர்ச்சி கண்டு ஐசன்ஹோவருக்குக் கிலி!

பயங்கரத் தாக்குதல் இருக்குமென்று அச்சம்

"கிழக்கு நாடுகளில் மட்டுமல்ல—உலகெங்குமே கம்யூனிஸ்டுகளின் பயமுறுத்தல் உள்ளதால், அமெரிக்கா, இப்போது உண்மையிலேயே அபாயகரமான நிலைமையில் இருக்கிறது,"

என்று, அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஐசன்ஹோவர் நிருபர்கள் கூட்டமொன்றில் கூறினார்.

"சரித்திர காலந்தொட்டு அமெரிக்காவுக்கு இப்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி போன்று எப்போதும் ஏற்பட்டது இல்லையாது."

என்று, அமெரிக்க கப்பல் படை அதிகாரி ஒருவர் கூறியது பற்றி ஐசன்ஹோவரை அபிப்பிராயம் கேட்டபோதுதான் அவர் மேலே கூறியபடி பதில் அளித்தார்.

'இந்த அபாயகரமான நிலையை எதிர்க்க சுதந்திர நாடுகள் அனைத்தும் இராணுவத் துறையில் பலப்பட வேண்டும்.

இராணுவப் பலம் மட்டும் போதாது, ஆழ்ந்த நம்பிக்கையும், மனோ திடத்தில் வலிமையும் காணப்பட வேண்டும் என்று' அவர் மேலும் கூறினார்.

அமெரிக்காவில் உள்ள அறிவாளிகளில் சிலர் எவ்வாறு கம்யூனிசத்தை ஆதரிக்கின்றனர் என்பது அவருக்கு ஆச்சரியமாயிருக்கிறதாம்.

கம்யூனிஸ்டுகளின் தாக்குதல் யாரும் எதிர்பாராத வகையில் மிகப் பெரும் அளவில் இருக்கு மென்று அவர் கூறினார்.

பர்மாவில் பாகிஸ்தான் கேட்டவர்!

முஜாகித் தலைவர் கைது

இரங்கூன், ஜூன் 11—

பாகிஸ்தான் —பர்மா எல்லையில் சுதந்திர முஸ்லிம் நாடு ஒன்று அமைக்க பிரச்சாரம் செய்யும் முஜாகிதின் தலைவர் காசிம் என்பவரைக் கைது செய்துவிட்டனர்.

அவர் கிழக்கு பாகிஸ்தான் சிறை ஒன்றில் வைக்கப்பட்டிருப்பதாக பர்மியப் பத்திரிகைகள் தெரிவித்தன.

காசிம், பர்மா சர்க்காரின் முன்னாள் போலீஸ் அதிகாரியானவர்.

கிழக்கு பாகிஸ்தான் சர்க்காரால் கைது செய்யப்பட்ட காசிமை பர்மாவுக்கு அனுப்புமாறு பர்மிய சர்க்கார் கேட்கும் என்று தெரிகிறது.

நோயாளியிடம் மருத்துவர் உண்மையைக் கூறலாமா?

"தன்னிடம் வந்துள்ள குணப்படுத்த இயலாத நோயாளியிடம் டாக்டர் என்ன செய்யவேண்டும்? 'உன் வியாதியை குணப்படுத்த இயலாது; இனி மரணமே உனக்கு மருந்து' என்ற உண்மையை உரைப்பதா? அல்லது, நோயாளியே தன் நிலையை தெரிந்து கொள்ளட்டும் என விட்டு விடுவதா?"

இந்தப் பிரச்னை குறித்து எழுதியுள்ள ஒரு கட்டுரையில் 'தி லான்செட்' என்ற இதழில் கண்டிருப்பதாவது:—

'ஒரு பழுத்த கிழத்துவனுயிருப்பவன், தான் சாகும தருவாயிலிருந்தால், 'நீ சாகப் போகிறாய்' என்று டாக்டர் தன்னிடம் கூறிட வேண்டுமென விரும்புகிறான்; காரணம், அவன் தனது கடைசி பிரார்த்தனையைக் கர்த்தருக்குச் செலுத்துவதில் ஆசை கொண்டவனுயிருப்பதால்!

தங்களின் வாழ்க்கை விவகாரங்களைச் சீர்படுத்த வேண்டுமென்று எண்ணுகின்ற சிலரும் தாங்கள் சாகத்தான் போகிறோம் என்று தெரிந்து கொள்ள விழைகின்றனர்.

ஆனால் மிகப் பலர், தங்களுடைய கோழைத்தனம் வெளிப்படாமலிருக்க, 'தாங்கள் சாகப் போகிறோம்' என்று தெரிந்து கொள்ள விரும்புவதில்லை.

எனவே, டாக்டர்கள், நோயாளி சாகப் போகிறான் என்பதைச் சொல்வதா, வேண்டாமா என்பது நோயாளியைப் பொறுத்தது!

விவேகமுள்ள மனிதர்கள், தங்கள் உடலில் என்ன கோளாறு, அக்கோளாறுகளைக்குணப்படுத்த என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதற்கான விளக்கங்களைத் தெரிந்து கொள்ள ஆசைப்படுகின்றனர், அவைகளைத் தெரிந்து கொள்ளும் அவர்கள், அச்சப்படாமல் எதையும் ஏற்றுக்கொள்ளும் மனோநிலை பெற்றவர்கள்.

இன்னும், குணப்படுத்த இயலாத வியாதிகள் யாரையேனும் பீடித்திருந்த ஆரம்பகாலமானல்; அது டாக்டரின் குறிப்பில் மட்டும் இருக்கவேண்டுமேயன்றி நோயாளிக்குச் சொல்லப்படக் கூடாது ஏனெனில், அந்த வியாதி அவனைக் கொல்ல பல ஆண்டுகள் ஆகும், அவனுக்கு அந்த வியாதி இருப்பதாகத் தெரிந்துவிட்டால் அதுவே அவனைச் சீக்கிரம் கொன்றுவிடும்.

ஈராக் தேர்தல்

யாருக்கும் மெஜாரிடி இல்லை!

ஈராக்கில் நடைபெற்ற தேர்தல்களில் எந்தக் கட்சிக்கும் போதிய மெஜாரிட்டி கிடைக்கவில்லை.

ஆட்சியில் இருந்த கான்ஸ்டிடியூஷனல் கட்சிக்கு முன்னர் 84 ஸ்தானங்கள் இருந்தது; இப்போது 56 ஸ்தானங்களே கிடைத்துள்ளன.

சுயேச்சைகள் 5 இடங்களைக் கைப்பற்றி உள்ளனர்.

யூனியன் கட்சியினர் சுயேச்சைகளுடன் சேர்ந்து கூட்டணி அமைப்பார்களா என்பது இனி மேல்தான் தெரியும்.

135 பேர் கொண்ட ஈராக் பார்லிமெண்டில் உம்மா சோஷலிஸ்டுகள் 14 இடங்களையும், தேசிய முன்னணியினர் 12 இடங்களையும் கைப்பற்றியுள்ளனர். இரண்டு இடங்களுக்கு தேர்தல் மீண்டும் நடைபெற வேண்டியிருக்கிறது.

தேர்தல்கள் நடைபெற்றும் எந்தக் கட்சியினரும் அரசாங்கம் அமைக்க இயலவில்லை.

பீகம் லியாகத் அலிகான்

தூதுவராக நியமனம்

காலஞ்சென்ற பாகிஸ்தான் முதலமைச்சர் லியாகத் அலிகான் மனைவியார் பீகம் லியாகத அலிகான் நெதர்லாந்து நாடுகளுக்கு பாகிஸ்தானின் தூதுவராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

முஸ்லிம் நாடுகளில் ஒரு பெண் தூதுவராக நியமிக்கப்படுவது இதுவே முதல் தடவையாகும். பீகம் லியாகத் அலிகான் செப்டம்பர் மாதத்தில் பதவி ஏற்பார் என்று தெரிகிறது.

பத்திரிகை ஆசிரியர் கைது

ராவல் பிண்டியிலிருந்து வெளிவரும் 'பாகிஸ்தான் காஷ்மீர்' என்ற வார இதழின் ஆசிரியரான கப் அப்பாசி, என்பவர், பஞ்சாப் மக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டுள்ளார்.

மே 28-ந் தேதிய இதழில், பாக். அரசாங்கத்தில் காஷ்மீர் விவகார இலாகா அதிகாரிகளைக் குறித்து அவதூறாக, எழுதினார் என்பதற்காகவே அவர் கைது செய்யப்பட்டாராம்

கைது

அனுமதி யின்றி இந்தியாவில் நுழைந்ததாக பம்பாயில் பாகிஸ்தானி ஒருவர் கைது செய்யப்பட்டார்.

"வடக்கு நோக்கி புறப்பட தயாராகுக!"

சிங்மன் ரீ போர் வெறி

"தென் கொரியா நாட்டை ஒன்றுபடுத்துவதற்காக, வடக்கு நோக்கி நடக்க தயாராகிக் கொள்ள வேண்டும். நாட்டை ஒன்றுபடுத்துவதின் முதற்படியாக 'தேசிய ஒற்றுமையை' மக்களிடை வளர்க்க வேண்டும்"

இவ்வாறு தென் கொரிய அதிபதி டாக்டர் சிங்மன் ரீ, புதிய சட்டசபையில் பேசுகையில் குறிப்பிட்டார்

அவர், 'வடக்கு நோக்கி நடத்தல்' என்றால் என்ன பொருள் என்பதை விளக்கவில்லை; ஆனால் அவர் அடிக்கடி "கம்யூனிஸ்டுகளுடன் நடத்தப்படும் பேச்சு வார்த்தைகள் தோல்வியடையும் என்பதினால் கொரியப் போரை மீண்டும் துவக்க வேண்டும்" என பயமுறுத்தி வந்திருக்கிறார்.

சர்க்காரை ஏமாற்றிய வியாபாரிகள்

பீகார் அரசு ரூ. 3 இலட்சம் நஷ்டமடைகிறது!

பீகார் அரசாங்கம் சுமார் ரூ 3 லட்சம் வரையிலும் ஏமாற்றப்பட்டதாகத் தெரிகிறது.

பொய்க் கையெழுத்திட்ட 'சலான்'கள் சுமார் 3 லட்சம் வரையில் இருப்பதாக, சர்க்கார், கணக்குகளைப் பரிசோதித்த, உயர்தர அதிகாரி ஒருவர் கண்டுபிடித்துள்ளார். இந்த பொய்ச் சலான்கள் பாட்னா, இம்பீரியல் பாங்க், முத்திரையுடன் சர்க்கார் கிடங்குகளிலிருந்து எடுத்துக் கொண்ட உணவுப் பொருள்களுக்காக என்று, சர்க்காரிடம தரப்பட்டனவாம் சில 'ரேஷன்' கடைக்காரர்களால்

'ரேஷன்' அதிகாரி ஒருவரின் தகவலின்பேரில் ஒரு வியாபாரி கைது செய்யப்பட்டார். இதில் சம்பந்தப்பட்டிருப்பதாகச் சொல்லப்படும் இன்னும் சில வியாபாரிகள் தலைமறைவாக இருக்கின்றனராம்.

அன்பழகன் சொற்பொழிவுகள்

★

வத்திராயிருப்பு (சிதம்பரம்)—

3—6—54 மாலை 7 மணிக்கு, தி. மு. க. ஆண்டு விழாவும், உடையார் பாளையம் ஆசிரியர் வேலாயுதம் படிப்பகத் திறப்பு விழாவும் சிறப்பாக நிகழ்ந்தன. தோழர் இரா. பாலகுருசாமி தலைமை வகித்தார். தோழர்கள் வள்ளியகுடி முருகேசன், செல்வி இளங்கோ, தோழர் செங்குட்டுவன் ஆகியோர் பேசியபின் தோழர் அன்பழகன் தி மு. கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசினார்.

* * *

ஒ…ஊர், (திட்டக்குடி)—

தோழர் வரதராசன் பி. ஏ., தோழியர் சரோஜினி திருமணம் 4—6—54 காலை 10 மணிக்கு தோழர் இரா. பாலகுருசாமி தலைமையில் நடைபெற்றது தோழர்கள் ஆனைமுத்து, க. அன்பழகன் ஆகியோர் மணமக்களை வாழ்த்தி விரிவுரையாற்றினர்.

* * *

வசிஷ்டபுரம் (திட்டக்குடி)—

4—6—54 மாலை 8 மணிக்கு தி மு கழக சார்பில் ஒரு மாபெரும் பொதுக் கூட்டம் தோழர் பாலகுருசாமி தலைமையில் நடைபெற்றது. தலைவரவர்கள், அமைச்சர் எம். எஸ். ராமசாமியின் போக்கைக் கண்டித்துப் பேசினார். பின்னர் தோழர் அன்பழகன் அவர்கள், நாம் ஏன் திராவிட நாடு பிரியவேண்டும் என்று சொல்கிறோம் என்பதையும், அதற்காக இதுவரை நடத்தியுள்ள போராட்டங்களையும் விளக்கிப் பேசினார்.

தி. மா. ஆதிதிராவிட மகாஜன சங்கம் (பம்பாய் கிளை)

1—6—54 காலை 9 மணிக்கு கிளையின் சார்பில் வாளக்கட்டவாடி குடி அரசு நிலயத்தில் ஆசிரியர் சா. வேதமுத்து அவர்களுக்கு ஒரு வரவேற்புக் கூட்டம் தோழர் மந்திரமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ஏ. எல். பெருமாள், குறள் வன்னிராயம் ஆகியோர் ஆசிரியரைப் பாராட்டிப் பேசினர். வரவேற்புக்குப் பதிலளித்து, ஆசிரியர் பேசுகையில், ஆதிதிராவிட சமுதாயம் எந்தெந்த விதத்தில் பாதிக்கப்பட்டுள்ளது என்பதை விளக்கினார்.

"அறிவுமணி"

30—5—54 மாலை 7 மணிக்கு திருச்சி எடமலைப்பட்டி புதூரில் தோழர் மு. கருணாநிதி அவர்களால் தோழர் அ. வை. சுப்பிரமணியத்தின் வாழ்க்கைத் துணைவியார் தோழியர் அம்பிகாவின் ஆண்மகவிற்கு 'அறிவுமணி' என்று பெயரிடப்பட்டது. அதுபோது தோழர்கள் எம். என். மணி, கு. பராங்குசம், நெடுமாறன், அம்பில் தர்மலிங்கம்; இராபி, டி. கே. சீனிவாசன் ஆகியவர்கள் குழந்தையை வாழ்த்தி சொற்பொழி வாற்றினர். குழந்தைக்கு உறவினர்களிடமிருந்தும், நண்பர்களிடமிருந்தும் பரிசுகளும் வாழ்த்துச் செய்திகளும் வழங்கப்பட்டன. இதன் நினைவாக 'நம்நாடு' இதழுக்கு ரூ 2 நன்கொடையாக வழங்கப்பட்டது—வரப்பெற்றேம். நன்றியுடையது—பொறுப்பாளர்.

பிறப்பு

சென்னை, ஜூன் 6—

28—5—54ல், தோழர் செங்குட்டுவன் துணைவியார் தோழியர் பவுனம்மாள் ஒரு பெண் குழந்தைக்குத் தாயானார். தாயும் சேயும் நலம் இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்காக ரூ 1—2—3 நன்கொடையாக அளிக்கப்பட்டது — வரப்பெற்றோம்-நன்றியுடையது-பொறுப்பாளர்.

கைநெசவுத் தொழிலாளர் பொதுக் கூட்டம்

சின்னாளப்பட்டி, ஜூன் 7—

31—5—54 மாலை 4 மணிக்கு சின்னாளப்பட்டி, மேட்டுப்பட்டி கைநெசவுத் தொழிலாளர் சங்கம் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் சங்கம் ஆகியவற்றைச் சேர்ந்த தொழிலாளர்கள் ஊர்வலம் நடைபெற்றது. மாலை 7 மணிக்கு தோழர் எஸ். பி. மணி தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. பல தோழர்கள் பேசினர். பின்னர் 36 இஞ்சி அகலத்திற்கு மேற்பட்ட எல்லா ரகங்களையும் கைத்தறிக்கு ஒதுக்க வேண்டுமென்ற சென்னை சர்க்காரின் தீர்மானத்தை அமுல் நடத்த மத்திய சர்க்காரைக் கோரியும்; கைத்தறி பாதுகாப்பு நிதியிலிருந்து தனிப்பட்ட நெசவுத் தொழிலாளிக்கும் நஷ்டஈடு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டும், 1947 ம் ஆண்டு விலைக்கு நூல் விலையை குறைக்க வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக் கொண்டும், மாஸ்டர் வீவர் சங்கத்தாருக்கு சரி உயர்வு கோரியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அனுதாபம்

"கொள்கை உறுதியும், தளராத மன திடமும் படைத்த இலட்சியவாதியான மணப்பாறை தோழர் குமரவேல் அவர்களை திராவிடம் இழந்துவிட்டது. அவருடைய மறைவால் வருந்தும் அவரது குடும்பத்தினருக்கும், ஓர் செயல் வீரரை இழந்துவிட்ட மணப்பாறை இயக்கத் தோழர்களுக்கும் திருச்சி மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக எனது ஆழ்ந்த அனுதாபத்தையும் வருத்தத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்" என தோழர் கு. பராங்குசம் தெரிவித்துக் கொண்டார்.

மறைவு

சென்னை 4-வது வட்ட தி மு. கழகத் தனைச் செயலாளர் தோழர் டி. இராசு அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் தங்கம்மாள 3—6—54ல் இயற்கை எய்தினர். 4—6—54ல் நடைபெற்ற சவ அடக்கத்தின்போது இயக்கத் தோழர்கள் பலர் கலந்து கொண்டதுடன் மயானத்தில் நடைபெற்ற அனுதாபக் கூட்டத்தில் தோழர் ஏ. எம். முத்தையா தலைமையில் பலர் அம்மையாரின் இயக்கத் தொண்டுகளைக் குறித்துப் பேசினர்.

துணைவியைப் பிரிந்து வருந்தும் டி. இராசு அவர்களுக்கு 4-வது வட்ட தி. மு கழகத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்ளுகிறோம்—நமது அனுதாபமும் உரித்தாகுக —(ஆ. ர்)

* * *

6—6—54ல் வளவனூர் தி. மு. கழகப் பொருளாளர் தெ. முத்துகிருஷ்ணசாமியின் தந்தையார் தெ முருகேசம்பிள்ளை இயற்கை எய்தியமைக்கு கழகச் சார்பில் அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது — நமது அனுதாபம் உரித்தாகுக.—(ஆ. ர்.)

* * *

திருவள்ளூர் தி. மு க. உறுப்பினர் தோழர் டி. ஏ. பச்சிகசாமி அவர்களின் தந்தையார் 8-6-54 அன்று இயற்கை எய்தியமைக்கு திருவள்ளூர் தி. மு கழகம் தனது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறது—நமது அனுதாபம் உரித்தாகுக—(ஆ-ர்.)

* * *

செவ்வபுரம் தி மு. க. பொருளாளர் ம. அம்மாசை அவர்களின் துணைவியார் தோழியர் தனபாக்கியமாளும், மைத்துனர் துரைசாமியும் ஒரே நாளில் இயற்கை எய்தியமை குறித்து கோவை மாவட்ட 30-வது கிளை தி மு.கழகம் அனுதாபம் தெரிவித்துக் கொள்ளுகிறது—நமது அனுதாபம் உரித்தாகுக—(ஆ-ர்.)

தி. மு. கழக மாநாடுகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏ. கோவிந்தசாமி, எம். எல் ஏ. அவர்கள், அமைச்சர் சுப்பிரமணியத்திடமும் சென்று கேட்டும் பார்த்தார்—அமைச்சரும் கை விரித்துவிட்டார்! பெரியதோர் மாநாட்டை நடத்துவதற்கான வசதியான திடல் தேடி வருகிறார்கள்—மதுரைத் தோழர்கள்.

அதுபோலவே, வடாற்காடு மாவட்ட மாநாடு, வேலூரில், இந்தத் திங்கள் 19—20 நாட்களில் நடத்த முடிவு செய்து விரிவான அளவிலே விளம்பரமும் செய்தாகிவிட்டது. சர்க்கார் வசமிருக்கும் 'கோட்டை வெளி'யில் மாநாடு நடத்த அனுமதி கோரப்பட்டது—மறுத்துவிட்டனர்.

கோட்டை வெளிதான் ஊருக்கு நடுவே இருப்பது: மாநாட்டுக்கு வரும் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு உணவு வசதி, தங்குமிட வசதி, போக்குவரத்து வசதி யாவும் குறைவற கிடைக்கக் கூடிய இடம்—இதை தருவது முடியாது என்று அதிகாரிகள் கண்டிப்பாகக் கூறிவிட்டனர். ஏமாற்றமடைந்த தோழர்கள், மாநாட்டை வேறு தேதிக்கு மாற்றிக்கொண்டு, புதிதாக இடம் பார்த்துக்கொண்டு வருகிறார்கள்.

வேலூர் கோட்டை வெளியில், எல்லா அரசியல் கட்சிக் கூட்டங்களும் நடைபெறுகின்றன—தி. மு. கழக மாநாடு நடத்துவது மட்டும் ஏன் தடுக்கப்படுகிறதோ தெரியவில்லை!

பல்லாயிரக்கணக்கான பொதுமக்களுடைய உரிமையையும் வசதியையும் பறிக்கும் வகையிலும், ஒரு ஜனநாயகக் கட்சி இயங்குவதை ஒடுக்கும் விதமாகவும் நடந்துகொள்ளும் போக்கு, சர்க்காருக்கு இருத்தலாகாது என்பதை எவரும் ஒப்புக்கொள்வர். எனினும், சர்க்காருடைய போக்கு இவ்விதம் இருக்கிறது இதற்குப் பரிகாரம் என்னவென்று தீவிரமாக யோசிக்க வேண்டிய அளவுக்கு, நமது பொறுமை சோதிக்கப்படுகிறது.

மாவட்ட மாநாடுகள் யாவும் விரைவிலே முடிந்து, ஜனவரியில் மாநில மாநாடு நடத்திவிடவேண்டும் என்பது தலைமைக் கழகத்தின் திட்டமாகும். மாவட்ட மாநாடுகள் முடிவுற்றதும் தேர்தல்களை நடத்தி, புதிய பொதுக் குழு அமைத்து, பொதுச்செயலாளரைத் தேர்ந்தெடுத்து மாநில மாநாடு நடத்த வேண்டி இருக்கிறது.

இந்நிலையில், மாவட்ட மாநாடுகள் நடத்துவதில், சர்க்காரின் போக்கு இடையூறு செய்வதை எண்ணும்போது வேதனையாகத்தான இருக்கிறது; எனினும், இவ்விதமான இடையூறுகள நமக்கு ஏற்படத்தான் செய்யும் என்று உணர்ந்து, அவைகளைக் கண்டு கோபப்படாமல, சலிப்பு கொள்ளாமல், மாவட்ட மாநாடுகளை நடத்துவதிலே தோழர்கள் முனைந்து நிற்க வேண்டும். திட்டப்படி ஜனவரியில், மாநில மாநாடு நடைபெற வேண்டும்—அதற்கேற்ற வகையில், மாவட்ட மாநாடுகளை நடத்துவதிலே தி. மு. கழகத் தோழர்கள் ஈடுபட வேண்டுகிறோம்.

வகுப்பு நீதியை ஒழித்து.....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பதுடன் நிற்காமல், ஏன், வேறு வகைகளுக்கு மார்க்கு-என்று வாதாடுகின்றன.

இளித்தவாயரை ஏய்க்க இந்த வாதங்கள் வீசப்படுகின்றன, இன்று, இந்தக் கேள்வி கேட்கும் கண்ணியர்கள் ஆச்சாரியார் காலத்தில் இதே முறை இருந்தபோது, ஏன் வாயடைத்துக் கிடந்தனர்?

முறை எப்படி இருந்தாலும் ஆச்சாரியார் ஆட்சியின்போது, பார்ப்பன மாணவர்களுக்கு இடம் அதிகம் கிடைக்கும்; காமராஜர் ஆட்சியிலே அப்படிக் கிடைக்காது என்ற அச்சமா?

50 மார்க்கு 150 ஆக்கப் படுவிடுவதால் வகுப்புநீதி கிடைத்துவிடும் என்றுஉறுதி ஏதும் இல்லை; எனினும் இந்தச் சிறு மாறுதலும், 'இந்து'வுக்கும், 'மித்திரனு'க்கும் சொதிப்பை மூட்டுகிறது.

பார்ப்பன மாணவர்கள் வெறும் புத்தகப் பூச்சிகள்; நெட்டுருப் போட்டும், ஆசிரியர்களின் அன்புக்குப் பாத்திரமாகும் கலைகளைப் பயின்றும் சுப்பவும் அதிக மார்க்குகள் பெற்று விடுவார்கள்; ஆனல் தேக திடம், உள்ளப்பாங்கு, ஊருக் குழைத்தல், உபயோககரமான விளையாட்டு என்பவைகளிலே, இந்தப் புத்தகப் பூச்சிகள் மார்க்குகள் வாங்க முடியாது; எனவே, தொழில் கல்லூரிகளில் இடம் கிடைப்பது சிறிதளவு குறைந்துவிடும்-என்ற அச்சம் போலும்!

"வைத்தியத் தொழிலுக்கும், என்ஜினீயரிங் தொழிலுக்கும், மார்க் திட்டமலாத மற்றவைகள் ஏன்? என்ன பயன்?—என்று 'மித்திரன்' கேட்கிறது.

சவுண்டிகளும், சகுனங்களும் ஒலிதங்களுக்களும், புள்ளோதாரை தயிர்ன்னைகளும், நோஞ்சானகளும் நோய் பிடித்தவர்களும் புத்தகப் பூச்சிகளாகி, வைத்திய, என்ஜினீயரிங் தொழில்களிலே நுழைந்தால், அந்தத் தொழில்களின் தரம் நிச்சயமாகக் குறையத்தானே செய்யும்?

தொழில்களின் தரம் கெடக் கூடாது என்பதற்காகத்தான், 50—150ஆக்கப்பட்டிருக்கிறது.

இதைப் புரிந்து கொள்ளவா முடியாது — 'இந்து'வுக்கும், 'மித்திரனு'க்கும்! எங்கே, ஒரு துளியாவது வகுப்பு நீதி கிடைத்துவிடுகிறதோ என்ற வயிற்றெரிச்சல்! வேறென்ன?

"50 மார்க்குகளை ஏன் 150 ஆக உயர்த்த வேண்டும்? முன்பு இருந்த முறையினால் தரம் கெட்டு விட்டதோ?'—என்று சாகசக் கேள்வி கேட்கிறது 'மித்திரன்'.

இந்தப் பேச்சு நாணயமும், வாக்குச் சுத்தமும் இப்போதுதானே முளைக்கிறது.

முன்பு இருந்த வகுப்புவாரி முறையை மாற்றினார்களே, ஒழித்தார்களே. அப்போது தரம் கெட்டுவிட்டது என்று கண்டுபிடித்தா மாற்றினார்கள்?

150 மார்க்குகளை வைத்திருப்பதால், மாணவர்களைப் பொறுக்கி எடுக்கும் கமிட்டியர், அதிகாரத்தை 'துஷ்பிரயோஜனம்' செய்யலாமாம்!

எவ்வளவு துணிவுடன், கமிட்டியினரைத் தாக்குகின்றனர் இந்த ஏடுகள்! எவ்வளவு நேரம் பிடிக்கும், ஆச்சாரியார் காலத்திலே இருந்த கமிட்டியின் நாணயம் எப்படிப்பட்டது என்று கேள்வி கேட்க!

'மித்திரன்' மிரட்டலே செய்கிறது—இப்படி ஒரு முறை வைத்துவிட்டிருக்கிறீர்கள்; சிலர் வரவேற்கிறார்கள்; ஆனல், இதைக் கொண்டே ஒரு நாளைக்கு, எங்கள் பக்க நியாயத்தை நிரூபித்துக்கொள்ள முடியும்; ஜாக்கிரதை—என்று மிரட்டுகிறது. பொருள என்ன?—பார்ப்பனரை ஆதரிக்கும் பேர்வழிகளை கமிட்டியில் புகுத்தி, சலுகை பெறுவ...பதுதான்! வெளிப்படையாகச் சொன்னதால், காமராஜரைக் கவிழ்த்துவிட்டு, வேறு மந்திரி சபை அமைத்து, காமராஜரின் திட்டத்தையே, வகுப்பு வெறியருக்குச் சாதகமான தாக்கிக்கொள்ள முடியும்—என்பதுதான், 'மித்திரன்' வாதம்.

"சமுதாயத்தின் சில பகுதிகள் மேற்குறித்த ஏற்பாட்டால் தங்களுக்கு லாபந்தானே என்று இப்போது எண்ணக்கூடும்; ஆனல் தேர்வுக் கமிட்டி தற்போது பெறும் அதிகாரம் இருபுறம் கூருள்ள கத்தி போன்றது; எந்தச் சமயம் எந்தத் திசையில் பாயுமென்று யாரும் சொல்ல முடியாது"

இது 'மித்திரன்' மணிமொழி! மிரட்டல் எவ்வளவு தொனிக்கிறது!!

காமராஜர் மீது—ஆச்சாரியாரை விட்டுக்குத் தூரத்தியது, கலைக்கு உதவாக் கல்வித் திட்டத்தை ஒழித்துக்கட்டியது — என்பவைகளுக்காக ஏற்பட்ட கோபத்தைவிட, 'ஏகபோகம்' குறைக்கப்படும் திட்டம் கொண்டுவருவதால், அதிகமான கோபம், ஆத்திரமே கிளம்புகிறது. இனி காமராஜர் மீது பாய, வகுப்பு வெறியர்கள் முன் வருவார்கள்!

காமராஜரின் திட்டம், அடிப்படை வகுப்புநீதியைத் தருவதல்ல; அந்தத் திட்டம் போதுமானது என்று திராவிட இயக்கம் கருதவில்லை-களிப்படையவில்லை—'இவ்வளவுதான் இவரால செய்ய முடிகிறது'—என்று மட்டுமே கூற முடியும்.

ஆனல், இதற்கே, இவ்வளவு வயிற்றெரிச்சல் கிளம்புகிறதே என்று எண்ணும்போது, வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை மீண்டும் பெற்ருக வேண்டுமென்று அனைவரும் பேசுவ கிளர்ச்சி செய்தால் ஒழிய, வகுப்பு வெறியரின் பெய்க்குணம அழிந்துபடாது எனபதுதான உறுதியாகிறது. வகுப்புவாரி பிரதிநிதித்துவம பெற்றுத் தீரவேண்டும்—அதற்கான வகையில் அரசியல் சட்டத்திலே, திருத்தம் செய்தாக வேண்டும்—துணிந்து காமராஜர் மந்திரிசபை இந்தப் பணியில் ஈடுபட்டால், சகாப் புகழ் பெறும்; திராவிடம் துணைநின்று ஆதரவு தரும்.

மிக மிகச் சாதாரணமான மாறுதலைக் கண்டு வகுப்பு வெறியர்கள், இவ்வளவு துணிவுடன் வம்புக்கு நிற்பார்களானல், நாடு சீறும்—பகை மூளும்,—நிச்சயமாக!

வெந்த புண்ணிலே, 'இந்து'வும், 'மித்திரனு'ம் வேல் கொண்டு குத்துகின்றன! புண் இருப்பது உண்மை—ஆனல் திராவிடச் சமுதாயம் வேங்கை போன்றது! வேல் கண்டு சீறி எழும்—பிறகு......!!

அழகிரி இலவச பள்ளி நிதிக்காக

13—6—54 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு

வண்ணையம்பதி தியாகராயர் கல்லூரியில்

அண்ணாதுரை தலைமையிலும்

மு. கருணாநிதி முன்னிலையிலும்

"அம்மையப்பன்"

(மு. கருணாநிதி 6 மாத சிறைவாழ்வில் தீட்டிய புதிய நாடகம்)

எஸ். எஸ். ராஜேந்திரன் குழுவினரால் நடிக்கப்படும்

டிக்கெட்: ரூ 1, அணு 8. —24-வது வட்ட தி.மு.க.

கழகக் கூட்டம்

★

திருமேனியார்கோவில்

தி. மு. கழக துவக்க விழா

14—6—54 திங்கள் மாலை

தலைவர்: என். சிட்டப்பா

பேசுவோர்:

என். வி. நடராசன்

ஆர். ராமானுசம், எம்.சி.

போ. தருமன

கே. எஸ். சௌந்தரராசன்

சொற் பயிற்சிக் கூட்டம்

13—6—54 காலை 10 மணியளவில், சென்னை, முத்தியாலுப்பேட்டை முத்தமிழ் மன்றத்தில், தோழர் ராமதாசன தலைமையில சொற் பயிற்சிக் கூட்டம் நடைபெறும். பொருள்: 'நம நாட்டு அறிஞர்கள்'.

'வள்ளுவன் விழா'

14—6—54 மாலை 6½ மணிக்கு தெனமாப்பட்டு அழகிரி திடலில இராமாவட்டம் திருப்பதூர அண்ணா சொற் பயிற்சி மன்றச் சார்பில, தோழர் ச. செகசலிங்கம தலைமையில் 'வள்ளுவன விழா' நடைபெறும. தோழர்கள் க. அன்பழகன், சி. பி. சிற்றரசு ஆகியோர் பேசுவர்.

சொற் பயிற்சி வகுப்பு

13—6—54 மாலை 2 மணிக்கு சென்னை, திருவல்லிக்கேணி கோஷா. பாலாஜியன படிப்பகத்தில நடைபெறும் சொற் பயிற்சி வகுப்பிற்கு தோழர என். விசுவநாதன தலைமை வகிப்பார். 'இன்றைய அரசியல்' என்னும் பொருள் பற்றி பலர் பேசுவர்.

திருமணம்

2—6—54 காலை 6 மணிக்கு திருவெண்ணெய்சேரி கிராமத்தில், தோழர் ஏ. முருகேசன் தலைமையில தோழர் கசிநாதன—தோழியர் பெரியநாயகி சீர்திருத்தத் திருமணம் நடைபெற்றது.

சேலம் மாவட்ட தி.மு.க. 2-வது மாநாடு

வரவேற்பு செயற் குழுவினருக்கு அழைப்பு

"சேலம் மாவட்ட 2-வது தி. மு. கழக மாநாட்டின் வரவு-செலவு கணக்குகள் சென்னை 'அறிவகத்'தில், 6—6—54-ந் தேதியிலிருந்து 8—6—54-ந் தேதி முடிய மூன்று நாட்களிலும் தணிக்கை செய்யப்பட்டன. மாநில தி. மு. கழக பொதுச் செயலாளர் அவர்கள், சென்னை மாவட்ட தி. மு. கழக முன்னுள் செயலாளர் தோழர் டீ. கோவிந்தசாமி அவர்களை தணிக்கையாளராக நியமித்திருந்தார்.

"மாநாட்டின் வரவேற்பு செயற்குழுக் கூட்டம் 17-6-54 மாலை 3 மணிக்கு சேலம் பாரத தெருவிலுள்ள அலுவலகத்தில் நடைபெறும். அதுசமயம் மாநாட்டின் வரவு-செலவு தணிக்கை அறிக்கை முதலியவை பரிசீலிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படும்.

செயற் குழுவினரின் பார்வைக்கு வரவு-செலவு கணக்குகள், தணிக்கை அறிக்கை முதலியவைகள 16—6—54-ந் தேதியிலிருந்து வைக்கப்படும். ஆதலால் கூட்டத்திற்கு 16—6—54 அனைவரும் வருமாறு வேண்டுகிறேன்," என செயலாளர் பி. இரமலிங்கம் அறிவிக்கிறர்.

செம்பியம் 20-வது வட்ட தி. மு. க. தோழர்கட்கு

"13—6—54 காலை 10 மணிக்கு செம்பியம், 115 கடைத்தெருவிலுள்ள கழக இல்லத்தில், கழகத் துணைச் செயலாளர் தோழர் சண்முகம் 8—6—54 மாலை இயற்கை எய்தியமைக்குத் இரங்கல் ஓர் அனுதாபக் கூட்டம் நடைபெறும்; தோழர்கள் வருகை தரவேண்டுகிறேன்," என செயலாளர் தோழர் பெ. ...ஏகாம்பரம் அறிவிக்கிறர்.

இராயப்பேட்டை 87-வது வட்ட தி.மு.கழக தோழர்கட்கு

13—6—54 காலை 9 மணிக்கு நெ. 23, பசார் ரோடு, இராயப்பேட்டை புதிய கழகக் கட்டிடத்தில் ஓர் 'மகிழ்ச்சிக் கூட்டம்' நடைபெறும்.

தபால்-தந்தி தொழிலாளர் சங்க ஆண்டு விழா

மேற்படி சங்கத்தின் சென்னைக் கிளையின் 7-வது ஆண்டு விழா 13-6-54 மாலை 6 மணிக்கு சென்னை ஜி. பி. ஓ -வில் ஜி வீரராகவலு தலைமையில் நடைபெறும். பேராசிரியர் சந்திரசேகரன் விழாவினை ஆரம்பித்து வைப்பார்.

... முன்னிலை தலைமை கழக ... தோழர் இரா.செழி... அவர்... அழகிரி அச்சகத்தில் ... விமல் (2க்கு ... தெ... ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.